# அவசரகூட்டப்பொருட்கள்

1. இம்மாநகராட்சிக்குட்பட்ட புளியடிரோடு புல எண்.B2/10-1 இல்தமிழ்நாடு குடிசைமாற்று வாரியத்தினரால் கட்டப்படும் 120 அடுக்குமாடி குடியிருப்பு வீடுகள் கட்ட கட்டட அனுமதிக்காக நாகர்கோவில், உள்ளூர் திட்டக்குழுமம் உறுப்பினர்செயலர் அவர்களின் கடிதம் ந.க.எண்.1538/2019 நாஉதிகு நாள்.10.02.2020 இன்படி சென்னை நகர்ஊரமைப்பு இயக்குநர் அவர்களால் திட்டஅனுமதி வழங்க இசைவளிக்கப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளநிலையில் OSR இடத்தினையும் OSR இடத்திற்கான அணுகு சாலையினையும் உள்ளாட்சிக்கு தானமாக ஒப்படைக்க தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் திருநெல்வேலி, தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்றுவாரியம், நிர்வாகபொறியாளர் அவர்களின்கடிதம் ந.க.எண்.112 (A)/உ.பொ.(தி) 2018 நாள்.12.02.2020 இன்படி மேற்படி மனையில் நகர்ஊரமைப்புத்துறையின் இசைவளிக்கப்பட்டுள்ள வரைபடத்தில்குறிப்பிட்டுள்ள OSR 380.72 ச.மீ பரப்பளவு இடம்மற்றும் OSR இடத்திற்கான அணுகுசாலை 665.28 ச.மீபரப்பளவு இடத்தினையும் மாநகராட்சி ஆணையாளர் பெயருக்கு தானமாகபெற அங்கீகாரத்திற்காக.

அலுவலககுறிப்பு - அங்கீகரிக்கலாம்

கோப்பு எண்.1678/2020/எப்1

**தீர்மானம் எண்.158 - அங்கீகரிக்கப்பட்டது.**

2. இம்மாநகராட்சிக்குட்பட்ட வார்டுஎண்.22, தம்மத்துக்கோணம் வேம்பனூர் கிழக்கு வில்லேஜ் புல எண்.796/1A,1B, 2, 5A,6A,7A இல் 8207 ச.மீ. (2.028 ஏக்கர்) பரப்பில் குடியிருப்பு மனைப்பிரிவிற்கு திருநெல்வேலி நகர் ஊரமைப்பு துணைஇயக்குநர் (பொ) அவர்களின் கடிதம் ந.க.எண். 6578/2019 திலி 43, நாள்.28.02.2020 இன்படிம.வ/ம.(திலி) எண்.1/2020 எனஎண்ணிடப்பட்டு நாகர்கோவில் மாநகராட்சி சாலைகளின்தரம் குறித்து உறுதி செய்த பின்னரே உள்ளாட்சியால் மனைப்பிரிவிற்கு இறுதி ஒப்புதல் வழங்கப்பட வேண்டுமென தெரிவித்து நிபந்தனைகளுடன் மனைப்பிரிவு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் மாநகரபொறியாளர் அவர்களின்குறிப்பின்படி மேற்கண்ட மனைப்பிரிவில் அமைக்கப்பட்டுள்ள தார்சாலையானது தரமானதாகவும்,

நல்லமுறையில் அமைக்கப்பட்டுள்ளதாகவும் குடிநீர்குழாய் அமைக்கவும், மற்றும் தெருவிளக்குகள் அமைக்கவும் மாநகராட்சியில் ரூ.80,000/- செலுத்தியுள்ளதாகவும் தெவித்துள்ளார்கள்.

எனவே மேற்கண்ட புல எண்.796/1A, 1B, 2, 5A, 6A, 7A இல் 8207 ச.மீ (2.028ஏக்கர்) பரப்பளவில் குடியிருப்பு மனைப்பிரிவிற்கு இறுதிஒப்புதல் வழங்க அங்கீகாரத்திற்காக.

அலுவலககுறிப்பு – அங்கீகரிக்கலாம்

கோப்பு எண்.13536/2019/எப்1

**தீர்மானம் எண்.159 – அங்கீகரிக்கப்பட்டது.**

3. இம்மாநகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.25, பார்வதிபுரம் சானல்கரை ரோடு புல எண். G4/9-1 (pt) இல் 5400 ச.மீ பரப்பளவு இடத்தில் உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவு ஒப்புதல் வழங்கும் பொருட்டு உத்தேச சாலை ஒதுக்கீட்டினை உள்ளாட்சிக்கு ஒப்படைப்பு செய்ய நாகர்கோவில் உறுப்பினர்செயலர் அவர்களின் கடிதம் ந.க.எண்.1579/2019 நாஉதிகு, நாள்.27.02.2020 கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் மேற்கண்ட மனைப்பிரிவில் சாலைக்கான 1755.53 ச.மீ மனையையும், பொது ஒதுக்கீடான `A' ற்கு 27.04 ச.மீ மனையும் ஒதுக்கப்பட்டுள்ளது.

எனவே மேற்கண்ட மனைப்பிரிவில் சாலைக்கென ஒதுக்கப்பட்டுள்ள 1755.53 ச.மீ மனையையும், பொது ஒதுக்கீடான 27.04 ச.மீ மனையையும் மாநகராட்சி ஆணையாளர் பெயருக்கு தானபத்திரம் மூலம் பதிவு செய்ய அங்கீகாரத்திற்காக.

அலுவலககுறிப்பு – அங்கீகரிக்கலாம்

கோப்பு எண்.13520/2019/எப்1

**தீர்மானம் எண்.160 – அங்கீகரிக்கப்பட்டது.**

4. நாகர்கோவில் மாநகராட்சியால் புளியடியில் அமைக்கப்பட்டுள்ள நவீன எரிவாயு தகனமேடை சோதனை மேற்கொள்ளும் பொருட்டு 28.11.2019 முதல் 3 மாதங்களுக்கு தேசிய சேவா சங்கம் -கன்னியாகுமரி நிறுவனத்திற்கு அனுமதி வழங்கப்பட்டது. அதனை தொடர்ந்து மேற்படி நவீன எரிவாயு

தகனமேடையினை 01.03.2020 முதல் 3 ஆண்டுகளுக்கு பராமரிப்பு செய்ய விருப்பம் உள்ள பொதுதொண்டு நிறுவனங்கள் விருப்ப

கடிதம் 31.01.2020-க்குள் சமர்பிக்ககேட்டு 15.01.2020-ம் தேதிய தினத்தந்தி தினசரி நாளிதழில் விளம்பரம் செய்யப்பட்டது. இந்நிலையில் வேறு எந்த தொண்டு நிறுவனங்களும் விருப்ப விண்ணப்பம் அளிக்கவில்லை. தேசியசேவாசங்கம் – கன்னியாகுமரி மட்டுமே விருப்ப கடிதம் வழங்கியுள்ளது. எனவே, மேற்படி நிறுவனத்திற்கு மாமன்ற தீர்மானம் எண்.596, நாள். 29.11.2019-ல் எரியூட்டும் கட்டணம் சடலம்ஒன்றுக்கு ரூ.2500/- என நிர்ணயம் செய்யப்பட்டுள்ள விகிதத்தில் தொடர்ந்து 01.03.2020 முதல் 3 ஆண்டுகளுக்கு உரிய நிபந்தனைகளுடன் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் இம்மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் ஒவ்வொரு சமுதாயங்களிலிருந்தும் சடலங்கள் திறந்தவெளியில் எரியூட்டப்பட்டு வருவதால் சுற்றுசுழல் மாசு ஏற்படுகிறது. மேலும் மேற்படி எரியூட்டும் இடங்களுக்கு மாசு கட்டுபாட்டு வாரியத்தின் அனுமதியும் பெறப்படவில்லை. எனவே, பொதுமக்கள் நலன்கருதியும், சுற்றுசூழல் பாதுகாப்புகருதியும், மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் திறந்தவெளிகளில் செயல்படும் எரியூட்டு மையங்களை தடைசெய்யவும், இம்மாநகராட்சி நவீன எரிவாயு தகனமேடை மூலம் அனைத்து சமுதாயத்தவரும் சடலங்கள் எரியூட்ட நடவடிக்கை எடுக்கும் பொருட்டும் அங்கீகாரத்திற்குவைக்கப்படுகிறது.

அலுவலககுறிப்பு - 1. அங்கீகரிக்கலாம்

2. அவசர அவசியம் கருதி தேசியசேவாசங்கம் – கன்னியாகுமரி நிறுவனத்திற்கு உரிய நிபந்தனையுடன் 01.03.2020 முதல் 3 ஆண்டுகளுக்கு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டதை அங்கீகரிக்கலாம்.

கோப்புஎண். 13893/2016/எச்1

**தீர்மானம் எண்.161 – அங்கீகரிக்கப்பட்டது.**

5. நாகர்கோவில் மாநகராட்சி வார்டு எண்.31, கதவு எண்.26B, வரிவிதிப்புஎண். 150/031/01887, அருள்மிகு நாகராஜகோயிலுக்கு சொந்தமான திருமண்டபம், தொடக்கம் முதல் திருமண மண்டபமாக செயல்படாமல், அன்னதான மண்டபமாக செயல்பட்டு வருகிறது எனவும், பொதுமக்களுக்காக வாடகை இல்லாமல் பொதுசேவைக்காக தேவஸ்தானத்தால் பயன்படுத்தப்பட்டு வருகிறது எனவும் தேவஸ்தான இணைஅலுவலர் / செயல் அலுவலர் அவர்களின் கடிதம் RC№.401/2019/F6 நாள். 28.05.19-ன்படி நிர்ணயம் செய்து வழங்கப்பட்ட சொத்துவரியினை ரத்துசெய்து வழங்க கோரப்பட்டுள்ளது. மேற்படி கோரிக்கையின்படி இம்மாநகராட்சி வருவாய்ஆய்வாளர் அவர்களின் 02.03.2020 தேதி அறிக்கையின்படி மேற்படி அருள்மிகு நாகராஜாகோயிலுக்கு சொந்தமான திருமண்டபம் தொடக்கம் முதல் அன்னதான மண்டபமாக செயல்படுவதால் தமிழ்நாடு நகராட்சி சட்டம் 83-ன் கீழ் சொத்துவரிவிலுக்கு அளித்து மேற்படி வரிவிதிப்பு எண்.150/031/01887-ஐ ரத்துசெய்யவும், நிலுவைதொகை ரூ.26,03,640-ஐ வஜா செய்யவும் அறிக்கை சமர்பிக்கப்பட்டதின் படிவார்டு எண்.31 வடக்குரதவீதி, க.எண்.26B, அருள்மிகு நாகராஜாகோயில் திருமண்டபம் சொத்துவரி விதிப்பினை ரத்து செய்யவும், 1988-1989 II அரையாண்டு முதல் 2019-2020 II அரையாண்டு வரை உள்ள தொகை ரூ. 26,03,640/-னை வஜாசெய்யவும் மன்றஅனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலககுறிப்பு - 1. வரிவிதிப்புஎண். 150/031/01887-ஐ ரத்துசெய்யலாம்.
2. வரிவிதிப்புஎண். 150/031/01887-க்கு உள்ளசொத்து வரிநிலுவை 1988-1989 II முதல் 2019-2020 IIவரை ரூ.26,03,640/-ஐ வஜாசெய்யலாம்.
3. அலுவலககுறிப்புஅனுமதிக்கலாம்.

கோப்புஎண்.2964/2019/அ4

**தீர்மானம் எண்.162 – அங்கீகரிக்கப்பட்டது.**